# 4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

**முன்னிலை : திரு.C.ராஜலிங்கம்.,பி.ஏ,பி.எல்.,**
**4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**உடுமலைப்பேட்டை**

2024–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 – ம் நாள் வெள்ளிகிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2054, குரோதி வருடம் மார்கழி திங்கள் 5–ம் நாள்

**<u>அசல் வழக்கு எண்.435/2022</u>**

**[CNR No.TNTI25000947-2022]**

S.விஜயலட்சுமி .... வாதி

/ எதிர் /

1. சீனிவாசன்,
2. முத்தம்மாள்,
3. ரங்கநாயகி,
4. தாமோதரன். .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது என் முன்னர் 20.11.2024 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சுப்பிரமணியன்., அவர்கள் ஆஜராகியும், 1,2,4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.பிரபாகரன்,C.மணிவாசகம், J.ஜூடே பிரபு, K.கோகுல்ராஜ் ஆகியோர்கள் ஆஜராகியும், உரிய கால அவகாசம் வழங்கியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், பிரதிவாதிகள் அழைக்கப்பட்டும் வருகை தராததால், ஒருதலைப்பட்சமாகத் தீர்மானிக்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்களைப் பரிசீலனை செய்து, இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

தாவாச் சொத்துக்கள், 07.06.1995 தேதிய, கிரைய பத்திரத்தின்படி வாதிக்கு

பாத்தியப்பட்டு அனுபவித்து வரும் தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கேட்டும், தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளோ அவர்களது குடும்பத்தாரோ, ஆட்களோ, எவ்விதத்திலும், அத்து மீறி உள்நுழையவோ, ஆக்கிரமிப்போ செய்ய கூடாது என்றும்,வாதியின் சுவாதீனத்தை தடுத்து குறுக்காட்டி இடைஞ்சல்கள் செய்யக் கூடாதென்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கேட்டும், தாராபுரம், 3 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி நீதிமன்றத்தில் அ.வ.எண்.379/2018 மற்றும் இ.ம.எண்.135/2019–ல் பிரதிவாதிகள் பெற்றுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டப்படி செல்லத்தக்கதல்ல, அது வாதியை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை பரிகாரம் கேட்டும், மற்றும் இவ்வழக்கு செலவுத்தொகையும் செலுத்தக்கேட்டும் வாதியால், இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :**

**2.1)** தாவா சொத்துக்கள் 07.09.1995–ம் தேதிய கிரையப்பத்திரத்தின்படி வாதிக்கு பாத்தியப்பட்டு, சுவாதீனத்தில் அனுபவித்து வந்துள்ளார். தாவா சொத்துக்கள் ஆதியில் வீரம்மாள் என்பவருக்கு 21.03.1970 மற்றும் 15.09.1973 –ம் தேதிய கிரையப் பத்திரங்களின் படி பாத்தியப்பட்டு, அவர் 07.03.1995 அன்று வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். வாதி, தாவா சொத்துக்களை அடைந்து தனது சுவாதீனத்தில் வைத்து ஆண்டு அனுபவித்து வந்துள்ளார். தாவா சொத்துக்களில் வாதியை தவிர வேறு யாருக்கும் எந்தவிதமான பாத்தியமும் உரிமையும், சுவாதீனமும் இல்லை. 24.06.1997 மற்றும் 18.08.1997 ஆகிய தேதிகளில் தாவா சொத்துக்களை பொறுத்து வாதியும் ஒரு ஆன்டனி மெமினிக் என்பவரும் பதிவு செய்யப்பட்ட இரண்டு கிரைய உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். அது விற்பனை செய்ய போடப்பட்டதல்ல. அருண்மொழி சோழன் என்பவர் ஆண்டனி மெமினிக்கிடம் மேடோபவர் கொடுத்ததாக சொல்லி கிரைய அக்ரிமெண்ட்படி சொத்துக்களை கிரையம் செய்து கொடுக்கும்படி கேட்டு உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.150/2017 மற்றும் அ.வ.எண்.151/2017 ஆகிய வழக்குகள் வாதியின் பெயரில் தாக்கல் செய்துள்ளார்.அதில் வீரம்மாளிடமிருந்து வாதி கிரையம் பெற்ற சொத்துக்களும்,

வேறு சில சொத்துக்களும் உள்ளது. மேற்படி இரண்டு வழக்குகளிலும், இருதரப்பிலும் விசாரணை செய்யப்பட்டு, 13.03.2020–ம் தேதியில் இரண்டு வழக்குகளையும், தள்ளுபடி செய்து வாதிக்கு சாதகமாக உத்தரவாகியுள்ளது. மேற்படி வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது, 1–ம் பிரதிவாதி தாவா சொத்துக்களுக்கு வந்து, வாதியிடம் தகராறு செய்ததால், வாதி தளி காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். 1–ம் பிரதிவாதி, வாதியின்பேரில் கேவியட் மனு தாக்கல் செய்துள்ளார். 1–ம் பிரதிவாதி, போலீஸ் விசாரணைக்கு பிறகு எந்தவிதமான பிரச்சனைகளிலும் ஈடுபடவில்லை.

**2.2)** தாவா சொத்துக்களை பொறுத்து, வாதியின் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யும்படி மனு கொடுத்தபோது, வழக்குகள் முடிந்த பிறகு பட்டா மாறுதல் செய்து தருவதாக கூறியுள்ளனர். வழக்குகள் முடிந்த பிற்பாடு,பட்டா மாறுதல் செய்யும்படி உடுமலைப்பேட்டை தாசில்தார் மூலமாக வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்கள் புல தணிக்கை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். அந்த அறிக்கையில், தாவா சொத்துக்கள் வாதிக்கு கிரையவகையில் பாத்தியப்பட்டது என்றும், வாதி தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், 1,2,3 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து, பொய்யான ஆவணங்களை உருவாக்கி, தாராபுரம் 3 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.379/2018 ஆக பாக வழக்கு தாக்கல் செய்து, தீர்ப்பாணை பெற்று, 1,2,3 பிரதிவாதிகள் மட்டும் சொத்துக்களை பாகம் செய்து கொண்டுள்ளது தெரிய வந்துள்ளது. அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அது வாதியின் உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.

**2.3)** 07.02.2022 அன்று தாவா சொத்திற்கு வாதி வந்தபோது, பக்கத்து உரிமையாளருக்கு காம்பவுண்ட் கேட்டில் அறிவிப்பு என்ற பெயரில் ப்ளக்ஸ் போஸ்டர் வைக்கப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் 1,2,3 பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற உத்தரவுப்படி பாத்தியப்பட்டதென்றும், உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.3/2022 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதிகள், வீரம்மாளின் வாரிசுகள் என்று சொல்லிக் கொண்டு பொய்யான பத்திரங்களை ஏற்படுத்தி, வாதியை ஏமாற்றி சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்து

வருகிறார்கள். எனவே, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு, வாதியால், இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிகள் ஆஜராகாததால், ஒருதலைப் பட்சமாக்கப்பட்டுள்ளார்கள்,

4. இவ்வழக்கு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே தீர்வு காண வேண்டிய பிரச்சனையாகும்.

5. இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆகவும், மற்றொரு சாட்சியான தமிழரசன் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில், வாதி தனது வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளையே வா.சா.1 சாட்சியமாக அளித்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. வாதி தரப்பில், தாவா சொத்துக்கள் 07.09.1995–ம் தேதிய கிரையப்பத்திரத்தின்படி வாதிக்கு பாத்தியப்பட்டு, சுவாதீனத்தில் அனுபவித்து வந்துள்ளார். அந்த கிரையப்பத்திரத்தின் சான்று நகல் வா.சா.ஆ.1 என்றும், வாதி, 26.10.2012 அன்று ஆழியார் காவல் நிலையத்தில் நில பத்திரம் காணவில்லை என்று கொடுத்த புகார்மனு ஏற்பு சான்றிதழ் வா.சா.ஆ.2 என்றும், 01.12.2012 அன்று ஆழியார் காவல் நிலையத்தில் பத்திரம் கண்டுபிடிக்க முடியவில்லை என்று வழங்கிய காவல்துறை சான்று நகல் வா.சா.ஆ.3 என்றும், தாவா சொத்துக்கள் ஆதியில் வீரம்மாள் என்பவருக்கு 21.03.1970 மற்றும் 15.09.1973–ம் தேதிய கிரையப் பத்திரங்களின் படி பாத்தியப்பட்டதாகும் என்றும், வீரம்மாள் பெயரிலுள்ள கிரையப்பத்திரங்களின் சான்று நகல்கள் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 என்றும், 07.03.1995 அன்று வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், வாதி, தாவா சொத்துக்களை அடைந்து தனது சுவாதீனத்தில் வைத்து ஆண்டு அனுபவித்து வந்துள்ளார் என்றும், தாவா சொத்துக்களில் வாதியை தவிர வேறு யாருக்கும் எந்தவிதமான பாத்தியமும் உரிமையும், சுவாதீனமும் இல்லை என்றும், 24.06.1997 மற்றும் 18.08.1997 ஆகிய தேதிகளில் தாவா சொத்துக்களை பொருத்து வாதியுடன் ஒரு ஆன்டனி மெமினிக் என்பவரும் பதிவு செய்யப்பட்ட இரண்டு கிரைய உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்

கொண்டுள்ளனர் என்றும், அது விற்பனை செய்ய போடப்பட்டதல்ல என்றும், அருண்மொழி சோழன் என்பவர் ஆண்டனி மெமினிக்கு மேடோவர் கொடுத்ததாக சொல்லி கிரைய அக்ரிமெண்ட்படி சொத்துக்களை கிரையம் செய்து கொடுக்கும்படி கேட்டு உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.150/2017 மற்றும் அ.வ.எண்.151/2017 ஆகிய வழக்குகள் வாதியின் பெயரில் தாக்கல் செய்துள்ளார் என்றும், வீரம்மாளிடமிருந்து வாதி கிரையம் பெற்ற சொத்துக்களும், வேறு சில சொத்துக்களும் உள்ளது என்றும், மேற்படி இரண்டு வழக்குகளிலும், இருதரப்பிலும் விசாரணை செய்யப்பட்டு, 13.03.2020–ம் தேதியில் இரண்டு வழக்குகளையும், தள்ளுபடி செய்து வாதிக்கு சாதகமாக உத்தரவாகியுள்ளது என்றும், மேற்படி வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது, 1–ம் பிரதிவாதி தாவா சொத்துக்களுக்கு வந்து, வாதியிடம் தகராறு செய்ததால், வாதி தளி காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார் என்றும், அதற்கான இரசீது நகல் வா.சா.ஆ.8 என்றும், 1–ம் பிரதிவாதி, வாதியின்பேரில் கேவியட் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த கேவியட் மனுவின் நகல் வா.சா.ஆ.9 என்றும், 1–ம் பிரதிவாதி, போலீஸ் விசாரணைக்கு பிறகு எந்தவிதமான பிரச்சனைகளிலும் ஈடுபடவில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

**6.1)** மேலும், வாதி தரப்பில், தாவா சொத்துக்களை பொறுத்து, வாதியின் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யும்படி மனு கொடுத்தபோது, வழக்குகள் முடிந்த பிறகு பட்டா மாறுதல் செய்து தருவதாக கூறியுள்ளனர் என்றும், வழக்குகள் முடிந்த பிற்பாடு, பட்டா மாறுதல் செய்யும்படி உடுமலைப்பேட்டை தாசில்தார் மூலமாக வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்கள் புல தணிக்கை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள் என்றும், 02.11.2021 அன்று உடுமலைப்பேட்டை தாசில்தார் கொடுத்த உத்தரவு நகல் வா.சா.ஆ.10 என்றும், 21.06.2021 அன்று குறிச்சிகோட்டை வருவாய் ஆய்வாளர் கொடுத்த அறிக்கை ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.11 என்றும், 08.12.2021 அன்று தளி கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த அறிக்கை ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.12 என்றும், வாதி, 05.02.2022 அன்று மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பிய புகார் மனு நகல் வா.சா.ஆ.13 என்றும், 05.02.2022 அன்று, வாதி திருப்பூர் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு நகல் வா.சா.ஆ.14

என்றும், அந்த அறிக்கையில், தாவா சொத்துக்கள் வாதிக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்டது என்றும், வாதி தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றும், மேலும், 1,2,3 பிரதிவாதிகள் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார் என்றும், பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து, பொய்யான ஆவணங்களை உருவாக்கி, தாராபுரம் 3 வது கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் அ.வ.எண்.379/2018–ல் இ.ம.எண்.135/2019–ல் பாக வழக்கு தாக்கல் செய்து, தீர்ப்பாணை பெற்று, 1,2,3 பிரதிவாதிகள் மட்டும் சொத்துக்களை பாகம் செய்து கொண்டுள்ளது தெரிய வந்துள்ளது என்றும், அதற்கான இறுதி உத்தரவு வா.சா.ஆ.6 என்றும், அ.வ.எண்.379/2019 தாக்கல் செய்ததற்கான பிராது வா.சா.ஆ.7 என்றும், அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வாதியின் உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

**6.2)** மேலும், வாதி தரப்பில், 07.02.2022 அன்று தாவா சொத்திற்கு வாதி வந்தபோது, பக்கத்து உரிமையாளருக்கு காம்பவுண்ட் கேட்டில் அறிவிப்பு என்ற பெயரில் ப்ளக்ஸ் போஸ்டர் வைக்கப்பட்டுள்ளது என்றும், அந்த ப்ளக்ஸ் போர்டு அறிவிப்பு ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.15 என்றும், 31.03.2022 தேதிய உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறை கடிதம் நகல் வா.சா.ஆ.16 என்றும், தாவா சொத்துக்கள் 1,2,3 பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற உத்தரவுப்படி பாத்தியப்பட்டதென்றும், உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.3/2022 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள், வீரம்மாளின் வாரிசுகள் என்று சொல்லிக் கொண்டு பொய்யான பத்திரங்களை ஏற்படுத்தி, வாதியை ஏமாற்றி சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்து வருகிறார்கள் என்றும், எனவே, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு, வாதியால், இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு அனுமதிக்கப்படவேண்டுமென்றும் எடுத்துரைக்கப்பட்டது.

<u>7. தீர்வு:–</u>

வழக்கில் வாதி தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வா.சா.1 மற்றும் வா.சா.2–ன் சாட்சியங்கள், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்களை

பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதி கட்சி செய்வது போல வழக்கு சொத்துக்கள் ஆதியில் வீரம்மாள் என்பவருக்கு ஆவண எண்.548/1970 ஆன வா.சா.ஆ.4 –ன் படி மற்றும் ஆவண எண். 2732/1973 ஆன வா.சா.ஆ.5–ன் படியும் வீரம்மாள் பெயருக்கு பாத்தியப்பட்டதாக தெரியவருகிறது. வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கின் 1–ம் பிரதிவாதி சீனிவாசன் அசல் வழக்கு எண்.379/2018 ஆக 2 முதல் 4 பிரதிவாதிகள் மீது பாகபிரிவினை கோரி தாராபுரம் 3வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் மேற்படி சொத்து வீரம்மாளுக்கு மேற்படி 2 கிரைய ஆவணங்கள் மூலம் பாத்தியப்பட்டதாகவே கூறுகின்றனர்.

8. வழக்கில், வா.சா.1 ஆக வாதி 07.09.1995 தேதியிட்டு ஆவண எண்.3440/1995 ஆக மேற்படி வீரம்மாளிடமிருந்து வழக்கு சொத்துக்களை கிரையம் பெற்றதாக குறிப்பிட்டு கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணத்தில், வீரம்மாள் தனக்கு மேற்படி சொத்து ஏற்கனவே குறிப்பிட்டது போல ஆவண எண்.548/1970 மற்றும் ஆவண எண்.2732/1973 ஆகிய ஆவணங்களை தான் முன் ஆவணங்களாக குறிப்பிட்டுள்ளார். இதன்படி பார்க்கும்போது, வாதி வீரம்மாளிடமிருந்து முறையாக கிரையம் பெற்றுள்ளது தெரியவருகிறது. ஆனால், வருவாய் துறை ஆவணங்களில் பிரதிவாதிகள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அதனை நீக்க கோரி மனு கொடுத்ததாக வா.சா.ஆ.10 காணப்படுகிறது. அதன்பேரில், நடைபெற்ற விசாரணையின்போது, பிரதிவாதிகள் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் உள்ளதாக, வருவாய் துறை ஆய்வாளரின் அறிக்கையான வா.சா.ஆ.11 மூலம் தெரியவருகிறது. இருப்பினும், வாதியின் மனுவின்பேரில் 31.03.2022 தேதியிட்டு உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் மேற்படி பிரதிவாதிகள் பெயரிலான பட்டாவை ரத்து செய்து முந்தைய நிலைக்கு மாற்றம் செய்து, உத்தரவிட்டுள்ளதாக வா.சா.ஆ.16 மூலம் தெரியவருகிறது.

9. வழக்கு ஆவண சாட்சியங்களை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதி வீரம்மாளிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதும், வீரம்மாள் காலத்திற்கு பிறகு பிரதிவாதிகள் தங்கள் பெயரை வருவாய் துறை ஆவணங்களில் சேர்த்துள்ளதும் தெரியவருகிறது. உரிமை ஆவணங்கள் இருக்கும்போதும்,

வருவாய்துறை ஆவணங்களை உரிமை ஆவணங்களாக கருத முடியாது என்பதால், வாதி பெயருக்கு சொத்தின் உரிமை ஆவணமாக வா.சா.ஆ. 1 கிரையப்பத்திரம் இருக்கும் நிலையில் அதனை மறைத்து பிரதிவாதிகள் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளதும் தங்களுக்கிடையே தரப்பினர்களாக இருந்து தீர்ப்பாணை பெற்று தற்போது இறுதி நிலை தீர்ப்பாணை 17.04.2021 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வா.சா.ஆ.6 காணப்பட்டாலும், மேற்படி தீர்ப்பு உரிமை ஆவணம் வைத்துள்ள வாதியின் உரிமைக்கு எதிரானதாக உள்ளதாலும் வாதி அந்த வழக்கில் தரப்பினராக இல்லை என்பதாலும், அந்த வழக்கின் தீர்ப்பு வாதியை கட்டுப்படுத்தாது. எனவே, வழக்கில் வாதி கோரியுள்ளவாறு சொத்தின் உரிமை குறித்த விளம்புகை மற்றும் அதனை தொடர்ந்து கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், அசல் வழக்கு எண். 379/2018 –ல் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணைகள் வாதியை கட்டுப்படுத்தாது என்று கூறும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>**முடிவாக,**</u>

தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும், தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளோ அவர்களது குடும்பத்தாரோ, ஆட்களோ, எவ்விதத்திலும், அத்து மீறி உள்நுழையவோ, ஆக்கிரமிப்போ செய்ய கூடாதென்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாராபுரம், 3 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி நீதிமன்றத்தில் அ.வ.எண்.379/2018 மற்றும் இ.ம.எண்.135/2019–ல் பிரதிவாதிகள் பெற்றுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வாதியை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும் மற்றும் இவ்வழக்கு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்தவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20–ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C RAJALINGOM

Digitally signed by C RAJALINGOM
Date: 2024.12.20 19:22:07 +0530

4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

**20.12.2024** IV **ADJ, UDT**

<u>வாதி தரப்பு சாட்சிகள்:–</u>

வா.சா.1 – விஜயலட்சுமி ( வாதி)

வா.சா.2 – தமிழரசன்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :–</u>

| ஆவணங்களின் வரிசை எண் | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 07.09.1995 | வாதியின் பெயரிலுள்ள கிரைய பத்திரம் - சான்று நகல் |
| வா.சா.ஆ.2 | 26.10.2012 | வாதி, ஆழியார் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ஏற்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.3 | 01.12.2012 | ஆழியார் காவல்நிலைய, காவல் துறை சான்று நகல் |
| வா.சா.ஆ.4 | 21.03.1970 | வீரம்மாள் பெயரிலுள்ள கிரைய பத்திரம் சான்று நகல் |
| வா.சா.ஆ.5 | 15.09.1973 | வீரம்மாள் பெயரிலுள்ள கிரைய பத்திரம் சான்று நகல் |
| வா.சா.ஆ.6 | 17.04.2021 | இ.ம.எண்.135/2019 இன் அ.வ.எண்.379/2018 உத்தரவு நகல் |
| வா.சா.ஆ.7 | – | அ.வ.எண்.379/2018–ன் பிராது நகல் |
| வா.சா.ஆ.8 | 01.11.2018 | வாதி, 1–ம் பிரதிவாதி பெயரில் தளி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு இரசீது நகல் |
| வா.சா.ஆ.9 | – | 1–ம் பிரதிவாதி, உடுமலைப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் போட்ட கேவியட் மனு நகல் |
| வா.சா.ஆ.10 | 02.11.2024 | வாதி பெயருக்கு உடுமலைப்பேட்டை தாசில்தார் கொடுத்த உத்தரவு நகல் |
| வா.சா.ஆ.11 | 21.06.2021 | குறிச்சி கோட்டை வருவாய் ஆய்வாளர் கொடுத்த அறிக்கை ஜெராக்ஸ் நகல் |
| வா.சா.ஆ.12 | 08.12.2024 | தளி, கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த அறிக்கை ஜெராக்ஸ் நகல் |
| வா.சா.ஆ.13 | 05.02.2022 | வாதி, மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பி புகார் மனு நகல் |
| வா.சா.ஆ.14 | 05.02.2022 | வாதி, திருப்பூர், காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு நகல் |
| வா.சா.ஆ.15 | – | ப்ளக்ஸ் போர்டு அறிவிப்பு ஜெராக்ஸ் நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.16 | 31.03.2022 | உடுமலைப்பேட்டை வட்டாட்சியரின் செயல்முறை கடிதம் நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u>** இல்லை

C RAJALINGOM

Digitally signed by C RAJALINGOM
Date: 2024.12.20 19:22:17 +0530

4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

O.S.No.435/2022
Date :20.12.2024
Fair/ Draft Judgment